பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 01 2026 12 40
புதன்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மேகாலயா, திரிபுரா, மணிப்பூர் மாநிலங்கள் உதயமான நாளையொட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. பயங்கரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி தமிழக மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

4. தமிழக சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வதற்கான கூட்டணி பேச்சுவார்த்தையை பிஜேபி தொடங்கியுள்ளது.

5. இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

. . இனி விரிவான செய்திகள் . .

மேகாலயா, திரிபுரா, மணிப்பூர் மாநிலங்கள் உதயமான நாளையொட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் அம்மாநிலங்களின் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இம்மாநிலங்கள் கலாச்சாரத்தாலும், பாரம்பரியத்தினாலும் செழுமையுடன் திகழ்வதாக கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காக பங்காற்றி வரும் இம்மாநிலங்களின் மக்களுக்கு குடியரசுத் தலைவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு இம்மாநில மக்களின் பங்களிப்பு முக்கித்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்காக இம்மாநிலங்களின் மக்கள் அரும்பாடுபட்டு வருதாக தெரிவித்துள்ளார்.

>>><><><><<<

பயங்கரவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா வந்துள்ள ஸ்பெயின் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு யோசே மானுவெல் அல்பரஸ் ப்யூனோவுடன் இன்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தியாவும், ஸ்பெயினும் ஒருங்கிணைந்து பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

புதுதில்லியில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் மனிதநேய அடிப்படையிலும் பொறுப்புணர்வுடனும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை இந்தியா வலியுறுத்தும் என்று திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தியாவும், ஸ்பெயினும் 70 ஆண்டு கால நட்புறவை கொண்டாடும் இத்தருணத்தில் அதற்கான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இருநாடுகளின் பாரம்பரியம், கலாச்சாரம், சுற்றுலா மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை கொண்டாடும் வகையில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதனால் இருநாடுகளும் பயன்பெறும் என்றும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

>>><><><><<<

மத்திய மோட்டார் வாகன சட்டதிருத்தத்தை மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது.

இதன்படி, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் வசூலிக்கப்படும் கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

டிஜிட்டல் முறையிலான வசூல் கட்டணங்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

இதனால் கட்டணம் செலுத்தாமல் வாகனங்களை இயக்க முடியாது.

வெளிப்படையான வசூல் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

>>><><><><<<

ஜனநாயகத்தில் தேர்தலின் முக்கியத்துவம், தேர்தல் நிர்வாகம் தொடர்பான இந்திய சர்வதேச மாநாடு இன்று காலை புதுதில்லியில் தொடங்கியது.

தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில் வெளிநாடுகளைச் சேர்ந்த வல்லுநர்கள் பங்கேற்றுள்ளனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்பீர் சிங் சாந்து மற்றும் டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோர் இந்த மாநாட்டிற்கு தலைமை வகித்து உரை நிகழ்த்துகின்றனர்.

இந்திய தேர்தல் நடைமுறைகள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கப்படும் என்று எமது செய்தியாளர் கூறுகிறார்.

மூன்று நாள் நடைபெறும் இந்த மாநாட்டில் 70 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளதாகவும், இந்த மாநாட்டின் போது 40க்கும் மேற்பட்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

>>><><><><<<

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில், அரசியல் கட்சிகளிடையே கூட்டணி பேச்சு வார்த்தைகள் தொடங்கியுள்ளன.

பிஜேபியின் தமிழ்நாடு தேர்தல் மேலிடப் பொறுப்பாளரும் மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், பிஜேபி மாநில தலைவர் திரு

நயினார் நாகேந்திரன் ஆகியோர் சென்னையில் இன்று கூட்டணி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறுவதற்கான இந்த ஆலோசனையில் அமமுக தலைவர் திரு டி டி வி தினகரன் பங்கேற்று பிஜேபி தலைவர்களை சந்தித்து பேசினார்.

இந்த கூட்டணியில் தாம் இணைந்துள்ளதாகவும், இது வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் திரு டி டி வி தினகரன் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் மதுராந்தகத்தில் கூட்டணி தலைவர்களுடன் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள நிலையில் பிஜேபியுடனான கூட்டணி பேச்சு வார்த்தைகள் தீவிரமடைந்துள்ளன.

>>><><><><<<

தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடரின் இரண்டாவது நாளான இன்று அவை கூடியதும் மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக அவை கூடியதும் மறைந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் திண்டிவனம் பன்னீர்செல்வம், ஒரத்தநாடு கணேசன், நாமக்கல் பொன்னுசாமி மற்றும் மக்களவை முன்னாள் தலைவர் சிவராஜ் பாட்டீல், கவிஞர் ஈரோடு தமிழன்பன் உள்ளிட்டோருக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டு இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் சட்டப்பேரவை நாளை காலை ஒன்பதரை மணிக்கு கூடும் என்று பேரவைத் தலைவர் திரு அப்பாவு அறிவித்தார்.

>>><><><><<<

எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி தமிழக மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

மயிலாடுதுறையைச் சேர்ந்த இந்த மீனவர்கள் 7 பேரும் நாகை மாவட்டம் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – செ.ஜெபராஜ் – 51 செகண்ட்ஸ்)

>>><><><><><<<

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் 27 ஆண்டு கால சேவைக்கு பிறகு ஓய்வு பெற்றதாக அமெரிக்க விண்வெளிக் கழகம் நாசா கூறியுள்ளது.

இதுதொடர்பாக நாசா இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சுனிதா வில்லியம்ஸ் மூன்று முறை சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்று 608 நாட்கள் விண்வெளியில் தங்கி ஆய்வு மேற்கொண்டதாக தெரிவித்துள்ளது.

அப்போது ஒன்பது முறை விண்வெளியில் நடந்து சாதனை படைத்துள்ளதாகவும் நாசா குறிப்பிட்டுள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் முதன்முறையாக கடந்த 2006 -ஆம் ஆண்டில் சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்றார்.

>>><><><><><<<

இந்தியாவும், ஐரோப்பிய யூனியனும் தடையற்ற வர்த்தக உடன்பாட்டில் கையெழுத்திட உள்ளதாக ஐரோப்பிய யூனியன் ஆணையத் தலைவர் திருமதி உர்சுலா வோன்டெர் லெயன் தெரிவித்துள்ளார்.

டாவோஸில் நடைபெற்று வரும் உலக பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், அடுத்த வார இறுதியில் தாம் இந்தியா செல்லவுள்ளதாகவும் அப்போது உடன்பாடு தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்றும் கூறினார்.

இம்மாதம் 25 ஆம் தேதி முதல், 27 ஆம் தேதிவரை அவர் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும், குடியரசு தின கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக தாம் கலந்து கொள்ளவுள்ளதாகவும் திருமதி உர்சுலா வோன்டெர் லெயன் தெரிவித்தார்.

>>><><><><><<<

கிரீன்லாண்டில் ஐக்கிய நாடுகளின் உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய வெளியுறவத்துறை அமைச்சர் செர்கே லாவ்ரோ, நார்வே மற்றும் டென்மார்க் நாடுகள் கிரீன்லாண்ட் பகுதியை 20 ஆம் நூற்றாண்டின் போதுதான் ஆதிக்கம் செலுத்தியதாக கூறியுள்ளார்.

இதுபோன்று பிரான்சும், இங்கிலாந்தும் 17 நிலப்பரப்புகளை ஆதிக்கம் செலுத்தி வருவதாகவும் செர்கே லாவ்ரோ குறிப்பிட்டார்.

>>><><><><<<

## விளையாட்டுச் செய்திகள்

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 22-20, 21-18 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Manami Suizu -ஐ வென்றார்.

>>><><><><<<

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் Andre Goransson இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் James Duckworth – Cruz Hewitt இணையை வென்றது.

இப்போட்டியின் தகுதிச் சுற்று முதல் ஆட்டத்தில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Samarth Sahita -வும் மகளிர் பிரிவில் Diya Ramesh-ம் வெற்றி பெற்றுள்ளனர்.

>>> End of News <<<